**வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கம் (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்,நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பந்தி 17.15 இன் பிரகாரம் மூலதன ஒதுக்கமாக இருக்கும் சொத்து மீள்மதிப்பீட்டு இலாபம் தனித்தனியாக காட்டப்பட வேண்டும் என்றாலும், 04 வாகனங்களை மீள்மதிப்பீடு | கம்பனியில் இருக்கும் மூலதன மீதியான ரூபா 5,271,743 என்பது இலங்கை மகாவலி அதிகாரசபையால் கால்நடை அபிவிருத்திப் பிரிவுக்கு செய்யப்பட்ட முதலீடுகளில் காட்டப்படும் மீதியாகும். எனவே, | மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் துல்லியமாக கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதன் மூலம் உருவான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 8,750,000 மீண்டெழும் ஒதுக்கமாக காட்டப்பட்டிருந்தது. | இந்த மீதியுடன் சேர்க்காமல் மீண்டெழும் ஒதுக்கமாகக் காட்டப்படுகிறது. | |
| (ஆ) | ரூபா 4,454,750 கிரயமான 14 வாகனங்கள் முழுமையாக மதிப்பிழந்த போதிலும் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டாலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பந்தி 17.19 இன் பிரகாரம் நிதி அறிக்கைகளில் நியாயமான பெறுமதியை முன்வைக்க சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் மற்றும் எஞ்சியபெறுமதி மீள்மதிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | இவற்றில் இருந்து 04 வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, எஞ்சிய வாகனங்களில் 02 உழவு இயந்திரங்கள் மற்றும் 42-0832 இலக்கம் கொண்ட இசுசு ட்ரக் ஒன்றை விற்பனை செய்வதற்கு மகாவலி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைனோ பௌசர் இலக்கம் 42-1470 மற்றும இசுசு ட்ரக் இலக்கம் 41-5739 ஆகியவை 2010 ஆம் ஆண்டு திருத்தும் நிலையத்திற்கு பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டன. மீதமுள்ள 03 டிரெய்லர்கள் 2023 யூன் 15 அன்று மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சேர்க்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்மானம் செய்யப்பட்ட ஆனால் இன்னும் பயன்படுத்தப்படும் சொத்துகளுக்கு நியாயமான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரிவு 07 இன் பிரகாரம், செலுத்த வேண்டிய மீதிகளின் அதிகரிப்பு ரூபா 847,968 ஆக இருந்தது, இது தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டும், ஆனால் ரூபா 2,629,523 ஆனது 2022 டிசம்பர் 31 இல் உள்ள காசு பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டது. காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டிய வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 604,190 ஆனது காசு உட்பாய்ச்சல் ரூபா.2,471,003 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 1,627,813 தொகையான இருப்பு, ரூபா 1,208,919 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவு, மற்றும் ரூபா 829,049 தொகையான நிலையான சொத்துக்கொள்வனவு என்பவற்றில் உள்ள அதிகரிப்பு என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்படவில்லை. | 2023 ஏப்ரல் கணக்குகளில் இருந்து திருத்தப்பட்டது. | காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் என்பவற்றை அடையாளம் கண்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரந்துருகோட்டை பண்ணையில் 1,113 ஏக்கர் 0 ரூட் மற்றும் 37.76 பேர்ச்சஸ் காணியும், தம்மின்ன பண்ணையில் 100 ஏக்கர் காணியும் கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணிகளின் பெறுமதிகள் கணக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்களை மதிப்பிடும் போது மதிப்பீட்டு அறிக்கையில், தனியார் பொது கூட்டாண்மையை தொடங்க மட்டுமே மதிப்பீடு பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | காணிகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீட்டிற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்குச் சொந்தமான தம்புத்தேகமவில் அமைந்துள்ள நிரவிய பண்ணை, கந்தளே பண்ணை, பொலன்னறுவையில் உள்ள சித்தபுர பண்ணை, வெலிகந்தவில் உள்ள முத்துவெல்ல பண்ணை ஆகியன 2005-2010 காலப்பகுதியில் முறையாக ஆவணங்களை மாற்றாமல் மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆயினும்கூட, ரூபா 22,336,573 கிரயமுள்ளஅந்தப் பண்ணைகளுக்குச் சொந்தமான 134 கட்டிடங்கள் மற்றும் பொருத்துக்கள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 63 ஆலைகள் மற்றும் இயந்திரங்கள், 03 ஜெனரேட்டர்கள், மற்றும் 260 தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பவை கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றாலும் அவை கணக்கில் காட்டப்பட்டுள்ளன. | அந்த சொத்துக்களை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கம்பனியின் நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளஇலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள உடைமைகள் மற்றும் சொத்துக்களை நிதி அறிக்கைகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2013 சனவரி முதல் 2022 டிசம்பர் வரையான 98 மாதங்களுக்கான ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பாக செலுத்த வேண்டிய ரூபா 23,444,505 தொகையானது கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 27 அன்று வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. 1971 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 16 இன் பிரகாரம், அது தொடர்பாக, செலுத்த வேண்டிய கூடுதல் கட்டணம் ரூபா 5,588,917 ஆனது ஒரு பொறுப்பாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | வரும் ஆண்டில் கூடுதல் கட்டணம் கணக்கிடப்பட்டு கணக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் சேமலாபநிதியில் செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் கூடுதல் கட்டணம் ஆகியவற்றை கணக்கிட்டில் எடுத்துக்கொண்டு அந்த வைப்புத்தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 யூலை முதல் 2022 டிசம்பர் வரையான 30 மாதங்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்பாக செலுத்த வேண்டிய ரூபா 1,305,618 தொகையானது கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 27 அன்று வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 27 இன் பிரகாரம், அது தொடர்பாக, செலுத்த வேண்டிய கூடுதல் கட்டணம் ரூபா 267,851ஆனது ஒரு பொறுப்பாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | வரும் ஆண்டில் கூடுதல் கட்டணம் கணக்கிடப்பட்டு கணக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் சேமலாபநிதியில் செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் கூடுதல் கட்டணம் ஆகியவற்றை கணக்கிட்டில் எடுத்துக்கொண்டு அந்த மீதித்தொகையை உடனடியாகச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அந்த ஆண்டின் வருமானம் மற்றும் செலவுகளை சரியாகக் கண்டறிவதற்குப் பதிலாக, முந்தைய ஆண்டின் லாபத்தில் கம்பனி தொடர்ந்து மாற்றங்களைச் செய்து வந்ததன் காரணமாக, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிஅறிக்கைகளில் ரூபா 4,663,530, ரூபா 5,793,005 மற்றும் ரூபா 1,325,555 ஆகிய இழப்புகள் முறையே ரூபா 16,028,032, ரூபா 7,987,195 மற்றும் ரூபா 1,695,098 ஆக 28 சதவீதம் முதல் 244 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. | 2020 க்கு முன் குறிப்பிடப்பட்ட சீராக்கங்கள் தொங்கல் கணக்குகளின் திருத்தங்களாகும். | அட்டுரு அடிப்படையில் வருமானம் மற்றும் செலவினங்களை துல்லியமாக கண்டறிந்து நிதி அறிக்கைகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டின் இறுதியில் ரூபா 2,019,420 நிகரப் புத்தக பெறுமதி ஆகக் காட்டப்பட்ட கம்பனிக்குச் சொந்தமான 26 வாகனங்களுக்கு அந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் நிரவியா கால்நடை பண்ணைக்கு சொந்தமானவை, மேலும், 2010 செப்டம்பர் முதல், பண்ணை கம்பனியின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறியது, அன்று முதல், இந்த சொத்துக்கள் கம்பனியின் உடைமை இல்லாததால் தேய்மானம் செய்யப்படவில்லை. இந்த சொத்துக்கள் 2023 யூன் 30 க்குள் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு மாற்றப்படும். | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட வாகனங்கள் அன்றைய தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நிதி அறிக்கைகளிலிருந்து நீக்கப்பட வேண்டும். |
| (எ) | 2003-2014 ஆம் ஆண்டில் சேவையில் இருந்து விலகிய ஊழியர்களின் சார்பாக செலுத்த வேண்டிய சம்பளம், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு ரூபா 565,763 ஆனது முன்னைய ஆண்டு சீராக்கமாக நட்டத்திற்கு எதிராக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் இந்த சீராக்கத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிதிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை ரூபா. | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது ஒதுக்கம் | | | | |
| (i) | மகாவலி பொருளாதார முகவராண்மை | 388,362,322 | | | |
| (ii) | கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | | இந்த பெறுமதிகளின் சார்பாக வழங்கப்பட வேண்டிய மீதிச் சான்றிதழ்கள் எதுவும் இல்லை மற்றும் 1999 இல் இந்த மீதிகள் முதலீடுகளாகக் காட்டப்பட்டன. | இந்த மீதிகள் தொடர்பாக போதுமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | ஐரோப்பா பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | போதுமான தகவல் | | |
| (iv) | வெளிநாட்டு நிதியுதவி | 5,729,782 | | | |
| (ஆ) | மூலதன ஒதுக்கம் | 5,271,743 | | | |
| (இ) | பெற வேண்டிய கணக்குகள் | | | | |
| (i) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை திணைக்களத்திலிருந்து பெற வேண்டியவை | 174,092 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர்வரும் ஆண்டில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தலை நேரடியாக கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்து மீதிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | தம்மின்ன உள்ளக பண்ணையிடமிருந்து பெற வேண்டியவை | 692,838 | மீதி உறுதிப்படுத்தல் | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதி அறிக்கைகளின் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,820,430, ஆனால் அதிகாரசபையின் நிதி அறிக்கைகளின் பிரகாரம், அதிகாரசபையிடமிருந்து செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,373,970 ஆக இருந்தது ரூபா 446,460 வித்தியாசமானது அவதானிக்கப்பட்டது. | இலங்கை மகாவலி அதிகாரசபையிலிருந்து செலுத்த வேண்டிய மீதியான ரூபா 5,820,430 இல் ரூபா 446,460 வித்தியாசமானது, அன்றைய நாள் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய சரக்குகளின் பெறுமதியாகும். மிருகங்களின் பெறுமதி மாத்திரமே மகாவலி அதிகாரசபையின் கணக்குகளில் எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கு சீராக்கம் மேற்க்கொள்ளப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதி அறிக்கைகளின் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு கம்பனி செலுத்த வேண்டிய மீதி எதுவும் இல்லை, மேலும் அதிகாரசபையின் நிதி அறிக்கைகளின் பிரகாரம், அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,660,488 ஆக காணப்பட்டு வித்தியாசமானது ரூபா 2,660,488 அவதானிக்கப்பட்டது. | இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் எதுவும் கம்பனிக்கு இல்லை. ரூபா 5.8 மில்லியன் தொகையானது மகாவலி அதிகாரசபையிலிருந்து கம்பனிக்கு மீளப்பெறப்பட வேண்டும். | கம்பனியின் புத்தகங்களை இலங்கை மகாவலி அதிகாரசபையின் நிதி அறிக்கைகளின் மீதியுடன் ஒப்பிடுவதன் மூலம் வேறுபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரிவு 2(1) மற்றும் 102 | வருமான வரிக்காக பதிவு செய்யவோ அல்லது கம்பனியால் வரியிலிருந்து விலக்கு பெறவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் விதிமுறைகளை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2021 நவம்பர் 16 திகதியிடபட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண் 01/2021<br>(i) செயல்பாட்டு கையேட்டின் பிரிவு 6.6 | நிதி அறிக்கைகளுடன் வரைவு வருடாந்த செயல்திறன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதி அறிக்கைகளுடன் வரைவு ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் பிரிவு 2.3 | செயல் திட்டத்திற்கு இயக்குனர் சபையின் அங்கிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | செயல் திட்டத்திற்கு இயக்குனர் சபையின் அங்கிகாரம்பெற வேண்டும். |
| (இ) 2013 செப்தம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.5 | செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூபா 12,187,788 அடையாளம் காணப்பட்டாலும், அந்தத் தொகையை தனிக் கணக்கில் வைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | செலுத்த வேண்டிய பணிக்கொடைகொடுப்பனவு ஒரு தனி கணக்கில் வைப்பு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 167,815 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,325,556 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,493,371 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மூலப்பொருட்களின் விலை ரூபா 19,106,253 ஆலும், உற்பத்திச் சம்பளம் ரூபா 2,348,769 ஆலும் அதிகரிக்கப்பட்டிருந்தாலும், விற்பனை வருமானம் ரூபா 22,797,396 ஆல் அதிகரித்தது, நிதி விளைவுகளின் மேற்கூறிய மேம்பாட்டிற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் சொத்துக்களை சரிபார்த்ததில் பயன்படுத்த முடியாதவை என அடையாளம் காணப்பட்ட ரூபா 9,453,140 தொகையான நிலையான சொத்துகள் குறித்து 2023 மார்ச் 27 வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சொத்து சரிபார்ப்பில் பழுதான மூலப்பொருளின் எழுதப்பட்ட பெறுமதி ரூபா 323,633 ஆகும். இந்த மூலப்பொருள் கழிவுகள் 2023 ஆம் ஆண்டில் அகற்றப்படும். | பழுதான பொருட்கள் மீதான மெய்மையாய்வு குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம், ஒவ்வொன்றும் ரூபா 10 மதிப்புடைய 5,000,000 பங்குகளை அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் உள்ளடக்கியுள்ளது. மற்றும் ஆரம்ப இயக்குநர்களுக்கு 03 பங்குகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. ஆனால் ஏனைய பங்குகள் 2022 டிசம்பர் 31 வரை கூட வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பங்குகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைக்கேற்ப பங்குகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 செப்டம்பர் 18 திகதியிடப்பட்ட அமைச்சரவை முடிவு இல. அமப/18/2083/803/031 மூலம் செயற்றிட்டக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளி முதலீட்டாளருடன் அரச-தனியார் பங்குடமையாக கம்பனியை மறுசீரமைக்க அங்கிகாரம் அளிக்கப்பட்டது. அங்கு, அரச-தனியார் பங்குடமையாக கம்பனியை மறுசீரமைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும் பணிகளின் காலக்கெடு தயாரிக்கப்பட்டாலும், அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.அதன் பின்னர், 2022 ஜனவரி 18 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/21/2229/317/025-1 மூலம் அரச-தனியார் முகாமைத்துவத்திற்கு ஒப்பந்தத்தின் கீழ் கம்பனியை மறுசீரமைப்பதற்கான அங்கீகாரம் அமைச்சரவையால் வழங்கப்பட்டிருந்தது, ஆனால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அரச-தனியார் பங்குடமை தொடர்பில் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச-தனியார் முகாமைத்துவத்துடன் ஒப்பந்தம் செய்து மறுசீரமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | தற்போது பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 8,156,000 பெறுமதியான 04 வாகனங்களை சுவீகரிக்க கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அரச தனியார் பங்குடமை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்களை உடைமையாக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கால்நடைத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டத்தின் நிதி முன்னேற்றம் 69 சதவீதம் ஆகும். மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், அதன் பௌதீக முன்னேற்றம் மிகக் குறைந்தளவான 3.125 சதவீதமாக இருந்தது. எருமைப் பிரிவின் நிதி முன்னேற்றம் 46 சதவீதமாக இருந்த அதேவேளை, அதன் பௌதீகமுன்னேற்றம் 34 சதவீதமாகவும் இருந்தது | அரச-தனியார் பங்குடமையாக மறுசீரமைக்கப்பட்ட பின்னர், மூலதனச் செலவினங்களைச் செய்து அதன் மூலம் இந்தத் துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | அடையக்கூடிய இலக்குகளின் அடிப்படையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறுவப்பட்ட இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் திட்டத்தின் பிரகாரம், 10,480 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிப்பதன் மூலம் ரூபா 3,627,000 வருமானம் ஈட்டும் என கம்பனி எதிர்பார்த்திருந்தும் 2,433 லிட்டரில் இருந்து ரூபா 1,565,959 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது, மற்றும் அதன் பௌதீக முன்னேற்றம் 23 சதவீதம் மற்றும் நிதி முன்னேற்றம் 43 சதவீதம் ஆகும். | நாட்டில் நிலவும் பொருளாதார நிலை காரணமாக ஐஸ்கிரீமின் கேள்வி குறைந்ததால் வருமானம் குறைந்துள்ளது. | அடையக்கூடிய இலக்குகளின் அடிப்படையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறுவப்பட்ட இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தெஹியத்தகண்டியவில் அமைந்துள்ள தம்மின்ன பண்ணையில் நெல் சாகுபடியின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் செலவு முறையே ரூபா 8,372,500 மற்றும் ரூபா 4,230,000 ஆகக் காணப்பட்ட அதேவேளை, உண்மையான வருமானம் மற்றும் செலவு முறையே ரூபா 5,519,406 மற்றும் ரூபா 7,989,998 ஆகக் காணப்பட்டு நெல் சாகுபடியின் நட்டம் ரூபா 2,470,592 ஆக இருந்தது. மேற்குறிப்பிட்ட நெல் சாகுபடியின் மூலம் எதிர்பார்க்கப்படும் நெல் உற்பத்தி 64,000 கிலோ, கிலோவாக இருந்த போதிலும், உண்மையான அளவு 46,524 கிலோவாகும். அதன்படி, பௌதீக முன்னேற்றம் 73 சதவீதமாகவும், வருமானத்தின் நிதி முன்னேற்றம் 66 சதவீதமாகவும், செலவின முன்னேற்றம் 189 சதவீதமாகவும் இருந்தது. | தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு 2023 ஆம் ஆண்டு வெளி நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | அடையக்கூடிய இலக்குகளின் அடிப்படையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறுவப்பட்ட இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நெல் சாகுபடியில் கிடைக்கும் நெல் விளைச்சலை ஒரு கிலோ ரூபா 130 க்கு விற்பனை செய்ய கம்பனி மதிப்பிட்டிருந்த போதிலும், திறந்த கேள்வி மனு எதுவும் அழைக்கப்படாமல் 4 தனியார் கம்பனிகளிடம் தொலைபேசி மூலம் பெறப்பட்ட விலையில் இருந்து தேர்வு செய்யப்பட்ட வாங்குபவருக்கு 1 கிலோ நெல் ரூபா 102 க்கு விற்கப்பட்டது. | நெல் விற்பனைக்கு விலை கூறுவது கடினமாகிவிட்டது. ஒரே நாளில் மட்டும் விலை குறிப்பிடப்பட்டிருப்பதாலும், அந்த விலை மறுநாள் செல்லுபடியற்று விடுவதாலும், இயக்குனர் முன்னிலையில் விலை பேசி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | போட்டி முறைகள் மூலம் உற்பத்திகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கம்பனி 2022 ஆம் ஆண்டு முதல் பிராய்லர் இறைச்சி உற்பத்தியை நிறுத்தியது மற்றும் 2022 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் பிரகாரம் வெளியில் இருந்து பிராய்லர் கோழிகளை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இருந்த போதிலும், பிராய்லர் கோழிகள் ரூபா 6,335,767 செலவில் வாங்கப்பட்டு விற்கப்பட்டன. | அதனை வரும் ஆண்டில் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும். | அடையப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பின்பற்றப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருகோட்டை விவசாய பண்ணையில் கால்நடை வளர்த்தல் பயிற்சி நிலையமொன்றாக மாற்றியமைக்கும் நோக்கில் மகாவலி அதிகார சபையின் ''சீ'' வலயத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்ட மாட்டு பண்ணை, ஆட்டுப் கொட்டகைகளை உள்ளடக்கிய நிர்மாணம் மற்றும் பொருட்கள் ரூபா 9,338,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறித்துரைத்த திட்டமோ அல்லது திட்ட முறைமையையோ கம்பனி நிறுவத்தவறியமையால் கையளிக்கப்பட்ட திகதி முதல் அந்த சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டு இந்த கால்நடைக் கொட்டகைகள் மற்றும் ஏனைய கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | இக்கட்டுமானங் களை திறம்பட பயன்படுத்துவதற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் பொருத்தமான வழிமுறைகள் வடிவமைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1986 ஆம் ஆண்டு கிராதுருக்கோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட கோழிப்பண்ணையின் 57 கட்டிடங்கள் 2019 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அவற்றில் 7 கட்டிடங்கள் முற்றாக இடிந்து விழும் நிலையில் இருந்ததால் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>ஆரம்பத்திலிருந்தே அதே இயந்திரங்களைப் பயன்படுத்தி அங்குள்ள பதப்படுத்தும் ஆலையில் பால் சார்ந்த பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன, மேலும் தொழிற்சாலை கட்டிடத்தின் பாழடைந்த தரை மற்றும் கூரை, தொழிற்சாலைக்குள் மழைநீர் கசிவு, பாழடைந்த வடிகால் அமைப்பு, பலவீனமான உள் சுத்த அமைப்பு, மற்றும் சரியான பராமரிப்பு இல்லாமல் உறைவிப்பான் மற்றும் குளிர் அறையின் நீண்ட கால பயன்பாடு போன்ற காரணங்களால் தயாரிப்புகளின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் இருந்தன. | 2023 ஆம் ஆண்டு கிரந்துருகோட்டை கால்நடைப் பண்ணையின் கட்டிடங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வில் சரிபார்த்து, மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு தேவையான பழுதுபார்ப்புகளை மேற்கொள்ள வேண்டும். பாழடைந்த கட்டடங்களை ஆய்வு செய்து, பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தால், இயக்குனர் குழுவின் ஒப்புதலுடன் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |